SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
CENTRE FOR EXTERNAL DEGREES AND PROFESSIONAL LEARNING

**THIRD YEAR EXAMINATIONS IN BACHILOR OF ARTS (EXTERNAL)-2011/2012**
HELD IN NOVEMBER / DECEMBER-2013

**COM 33 – கணக்கியல் கோட்பாடும் நியமமும்**

எல்லாவினாக்களுக்கும் விடையளிக்குக — நேரம் : 03 மணித்தியாலங்கள்

கணிகருவி அனுமதிக்கப்படும்

---

## வினா 01

(அ) பொது நோக்க நிதிக்கூற்றுக்களினுடைய பல்வேறுபட்ட தகவல் பாவனையாளர்களை அடையாளம் கண்டு அவர்களினுடைய தகவல் தேவையின் தன்மையினை சுருக்கமாக விளக்குக.

(ஆ) பொது நோக்க நிதிக்கூற்றுக்கள் விசேட நோக்க நிதிக்கூற்றுக்களிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றன?

(இ) ஏனைய சுருக்கமான வருமானம் (Other Comprehensive Income) என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது? ஏனைய சுருக்கமான வருமானத்தினுடைய உறுப்புக்களை விளக்குக.

(ஈ) ஏனைய சுருக்கமான வருமானத்தினை வருமானக்கூற்றில் தனியாக காட்டப்பட வேண்டியதன் அவசியத்தினை விளக்குக.

(உ) நிதிக்கூற்றுக்களை தயாரித்து பிரசுரிப்பதற்கான கட்டமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி நிதிக்கூற்றுக்கள் கொண்டிருக்க வேண்டிய நான்கு தரரீதியான பண்புகள் யாவை?

(ஊ) ஒரு நிறுவனத்தின் இலாபம் அல்லது நட்டத்தில் அடையாளப்படுத்தக்கூடிய செலவுகளை வகைபடுத்தி பிரசுரிப்பது பற்றி இலங்கை கணக்கியல் நியமம் - 01 இல் பரிந்துரைக்கப்பட்டுள்ள பல்வேறு முறைகளையும் விளக்குக.

(எ) நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும்போது கீழ்வரும் கணக்கியல் எண்ணக்கருக்களின் தாக்கத்தினை விளக்குக.

i. தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு (Going Concern)

ii. பிற்போடப்பட்ட கொடுப்பனவு முறை எண்ணக்கரு (Accrual basis)

(20 புள்ளிகள்)

## வினா 02

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 2இன் பயன்படுத்துகையிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ள மூன்று இருப்பு வகைகளை குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

(ஆ) குமார நிறுவனம் 31 மார்ச் 2012 இல் உள்ளபடியான அதனுடைய இறுதியிருப்பு விபரங்களை உமக்கு கீழே வழங்குகின்றது.

| வகை | கொள்வனவு செய்யப்பட்ட அலகுகள் | வருட இறுதியில் கையிருப்பிலுள்ள அலகுகள் | நிகர தேறத்தக்க பெறுமதி (NRV) (ஓர் அலகிற்க்கு ரூபாயில்) | வரலாற்றுக் கிரயம் (ஓர் அலகிற்க்கு ரூபாயில்) | விற்பனைக்கான கிரயம் (ஓர் அலகிற்க்கு ரூபாயில்) |
|---|---|---|---|---|---|
| P | 3000 | 1000 | 15 | 14 | 2 |
| Q | 4000 | 2000 | 20 | 22 | 2 |
| R | 5000 | 3000 | 10 | 09 | 2 |
| மொத்தம் | 12000 | 6000 | 45 | 45 | 2 |

31 மார்ச் 2012 இல் உள்ளபடி கீழ் வருவனவற்றை கணிப்பிடுமாறு நீர் வேண்டப்படுகிறீர்.

i. இருப்பினுடைய சந்தைப் பெறுமதி (Fair value of inventory)

ii. இருப்பினுடைய கிரயப் பெறுமதி (Value of inventory at cost)

(04 புள்ளிகள்)

(இ) கீழ்வரும் தகவல்கள் ஓர் உற்பத்திக் கம்பனியின் 2012 ஆம் ஆண்டுக்கான மூலப்பொருட்கள் P,Q,R,S என்பனவற்றினதும் முடிவுப்பொருட்களான X,Y என்பனவற்றினதும் இறுதி இருப்பு தொடர்பானவையாகும்.

| விபரம் | மூலப்பொருள் P | மூலப்பொருள் Q | மூலப்பொருள் R | மூலப்பொருள் S | முடிவுப்பொருள் A | முடிவுப்பொருள் B |
|---|---|---|---|---|---|---|
| இறுதியிருப்பு (அலகுகளில்) | 2000 | 3000 | 3000 | 2000 | 4000 | 5000 |
| ஓர் அலகிற்கான கிரயம் (ரூபாயில்) | 60 | 110 | 70 | 100 | 160 | 210 |
| நிகர தேறத்தக்க பெறுமதி (NRV) (ரூபாயில் | 70 | 100 | 60 | 110 | 210 | 160 |

31 டிசம்பர் 2012 இல் உள்ளபடி உற்பத்திக் கம்பனியின் இறுதி இருப்புப் பெறுமதியினைக் கணிக்குக.

(05 புள்ளிகள்)

(ஈ) கீழ்வரும் கொடுக்கல் வாங்கல்கள் அருண் நிறுவனத்தில் X மூலப்பொருள் சம்மந்தமாக 2012 ஆம் ஆண்டில் இடம்பெற்றவையாகும்.

| திகதி | | பெற்றுக்கொள்ளப்பட்ட அலகுகள் | வழங்கப்பட்ட அலகுகள் |
|---|---|---|---|
| 02 | ஜனவரி | 4000 அலகுகள் ஓர் அலகு ரூபா. 4.00 படி | |
| 20 | ஜனவரி | 500 அலகுகள் ஓர் அலகு ரூபா. 5.00 படி | |
| 5 | ஜனவரி | | 2000 அலகுகள் |
| 10 | பெப்ருவரி | 6000 அலகுகள் ஓர் அலகு ரூபா. 6.00 படி | |
| 2 | மார்ச் | | 1000 அலகுகள் |
| 5 | மார்ச் | | 3000 அலகுகள் |
| 15 | மார்ச் | 4,500 அலகுகள் ஓர் அலகு ரூபா. 5.50 படி | |
| 20 | மார்ச் | | 3000 அலகுகள் |

இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இல் குறிப்பிட்டுள்ளபடி பொருத்தமான முறைப்படி அருண் நிறுவனத்தின் இறுதி இருப்பினைக் கணிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 03

(அ) 'வெளிநாட்டுச் செலாவணி' (foreign currency) 'செயற்பாட்டு செலாவணி' (functional currency) எனும் எண்ணக்கருக்களினால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

(05 புள்ளிகள்)

(ஆ) 'வெளிநாட்டு நிறுவனம்' (foreign entity) 'வெளிநாட்டு செயற்பாடு' (foreign operation) என்பனவற்றை வேறுபடுத்தி அவை ஒவ்வொன்றிற்க்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.

(05 புள்ளிகள்)

(இ) கீழ்வரும் தகவல்கள் XY நிறுவனத்தின் 31 டிசம்பர் 2012 இல் முடிவடையும் நிதியாண்டுக்கான வெளிநாடடுச் செலாவணி மூலமான கொடுக்கல் வாங்கல்களாகும்.

i. 2012 ஜனவரி யில் 2500 அலகு மூலப்பொருட்கள் அமெரிக்க நிறுவனம் ஒன்றிடமிருந்து 25,000 அமெரிக்க டொலரிற்கு கொள்வனவு செய்யப்பட்டது. இதில் 20% கொடுப்பனவுகள் ஏப்ரல் 2012 இலும் மீதி 2013 பெப்ருவரியிலும் மேற்கொள்ளப்படும்.

ii. 2012 மார்ச் மாதத்தில் இயந்திரமொன்று KL நிறுவனத்திடமிருந்து 40,000 அமெரிக்க டொலர் பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்டது. இதன் 50% கொடுப்பனவு 2012 ஏப்ரல் மாதத்திலும் மீதி 2013 மார்ச் மாதத்திலும் மேற்கொள்ளப்படும்.

iii. கீழ்வரும் மேலதிக தகவல்களும் உமக்கு தரப்படுகின்றன.
31 டிசம்பர் 2012 இல் 500 அலகுப் பொருட்கள் இருப்புக்களாக காணப்பட்டன.

மேற்கூறப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்ற காலப்பகுதிகளுக்கான இலங்கை ரூபாவின் (அறிக்கையிடும் நிறுவனத்தின் செயற்பாட்டு நாணயம்) சராசரி செலாவணி மாற்று விதம் கீழ்வருமாறு.

| | |
|---|---|
| ஜனவரி 2012 | 140 |
| பெப்ருவரி 2012 | 140 |
| மார்ச் 2012 | 142 |
| ஏப்ரல் 2012 | 142.4 |
| டிசம்பர 2012 | 144 |
| 2012 ஆம் ஆண்டிற்கான சராசரி | 142 |

இலங்கை கணக்கீட்டு நியமம் 21 ஐ – (வெளிநாட்டு செலாவணி மாற்று வீதத்தால் ஏற்படும் தாக்கம்), பயன்படுத்தி பொருள் விற்பனை உள்ளடங்கலாக மேற்கூறப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்கான நாட்குறிப்புபதிவுகளைக் காட்டுவதோடு இக்கொடுக்கல் வாங்கல்களினால் ஏற்பட்ட செலாவணி மாற்று வீத தாக்கத்தினையும் (இலாபம் / நட்டம்) கணிக்குக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 04

(அ) விலைமட்ட மாற்றத்தில் நடைமுறை கொள்வனவு சக்தி (Current Purchasing Power) முறையால் ஏற்படும் நன்மை தீமைகளை குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

(ஆ) AMR நிறுவனம் வியாபாரத்தை 1 ஜனவரி 2011 இல் ஆரம்பித்தது. விலைமட்டம் தொடர்ச்சியாக அதிகரித்து செல்வதால் பிரதம நிதி அதிகாரி இயக்குணர்களின் நன்மை கருதி ஒவ்வொரு வருடமும் விலைமட்ட மாற்றத்தின் தாக்கத்தினை வெளிப்படத்தக் கூடிய வகையில் நடைமுறை கொள்வனவு சக்தி முறையைப் பயன்படுத்தி நிதிக்கூற்றுக்களை

தயாரிக்க விரும்புகிறார். சில்லறை வியாபார விலைச்சுட்டியினைப் பயன்படுத்துவது வியாபாரத்திற்க்கு நன்மை பயக்கும் எனவும் அவர் கருதுகிறார். நிறுவனத்தின் முதல் 2 வருட வியாபாரத்துக்குமான சில்லறை வியாபார விலைச்சுட்டி பின்வருமாறு.

| | சில்லறை வியாபார விலைச்சுட்டி **(RPI)** |
|---|---|
| 1-1-2011 | 100 |
| 1-11-2011 | 116 |
| 31-12-2011 | 118 |
| 2011 இல் சராசரி | 110 |
| 1-11-2012 | 142 |
| 31-12-2012 | 145 |
| 2012 இல் சராசரி | 128 |

**31 டிசம்பர் 2012 இல் உள்ளபடி நதிநிலமை பின்வருமாறு.**

| | ரூபா. |
|---|---|
| நடைமுறையல்லா சொத்துக்கள் - கிரயத்தில் | 15,300 |
| தேய்வு | (1,500) |
| தேறிய புத்தக பெறுமதி | 13,800 |
| | |
| இருப்பு (சராசரி கொள்வனவு திகதி: 1 நவம்பர்) | 3,265 |
| வியாபார பெறுகைகள் | 4,488 |
| காசு | 306 |
| | 8059 |
| மொத்த சொத்துக்கள் | **21,859** |
| உரிமை | 2,000 |
| திரண்ட இலாபம் | 16,218 |
| | 18,218 |
| வியாபார செலுத்துகைகள் | 3,641 |
| மொத்த உரிமையும் பொறுப்பக்களும் | **21,859** |

நிறுவனத்தின் 31 டிசம்பர் 2012 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வரலாற்றுக்கிரய ரீதியிலான வருமானக்கூற்று பின்வருபாறு.

| | ரூபா. | ரூபா. |
|---|---|---|
| விற்பனை வருமானம் | | 27,234 |
| விற்ற வரக்கின் கிரயம் | | |
| ஆரம்ப இருப்பு | 3,060 | |
| கொள்வனவு | 19,176 | |
| | 22,236 | |
| கழி: இறுதியிருப்பு | (3,265) | |
| | | 18,971 |
| மொத்த இலாபம் | | 8,263 |
| தேய்வு | | (750) |
| செலவுகள் | | (985) |
| தேறிய இலாபம் | | 6,528 |

**மேலதிக தகவல்கள்**

i. வியாபாரத்தினை ஆரம்பிக்கும் போது ரூபா. 7,500 பெறுமதியான நடைமுறையல்லாச் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டன. மீதிச் சொத்துக்கள் 2012 ஆரம்பத்தில் கொள்வனவு செய்யப்பட்டன.

ii. தேய்வானது நேர் கோட்டு முறைப்படி வருடத்திற்க்கு 10% மேற்கொள்ளப்படும்.

iii. நிதிசார் சொத்துக்கள் பொறுப்பக்கள் மீள் பெறுமானமிடப்படவில்லை.

iv. 2011 இன் நிதிசார் விடயங்கள் பெறுகைகள் ரூபா. 4,284 யும் காசு ரூபா. 816 யும் செலுத்துகைகள் ரூபா. 2,856 யும் வரலாற்றுக்கிரயப் பெறுமதியில் காணப்படுகின்றன.

v. நடைமுறை கொள்வனவு சக்தி முறைப்படி செம்மையாக்கம் செய்யப்பட்டதின் பின்னர் 2011 இல் திரண்ட இலாபம் ரூபா. 10,962 ஆகும்.

**வேண்டப்படவது:**

i. நடைமுறை கொள்வனவு சக்தி முறையைப் பயன்படுத்தி 31 டிசம்பர் 2012 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக்கூற்றையும் அத்திகதியில் உள்ளபடியான நிதி நிலமையை காட்டும் கூற்றையும் தயாரிக்குக.

(20 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 05

மூண் நிறுவனம் அதனது 31 டிசம்பர் 2012 இல் முடிவுற்ற அண்டுக்கான நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமத்தின் அடிப்படையில் தயாரிக்கிறது. 2012 ஆம் ஆண்டுக்கான நிதிசார் தகவல்கள் பின்வரமாறு.

| | 2012 | 2011 |
|---|---|---|
| | ரூபா. 000 | ரூபா. 000 |
| பெறுகைகள் | 725 | 850 |
| வியாபார கொடுப்பனவுகள் | 310 | 425 |
| இருப்பு | 625 | 550 |
| ஏனைய செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு – சேவைகள் | 15 | |
| செலுத்தவேண்டிய கூலி சம்பளத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு | 65 | |
| செலுத்தவேண்டிய வட்டியில் ஏற்பட்ட அதிகரிப்பு | 2 | |
| நடைமுறையில் செலுத்தவேண்டிய வரியில் ஏற்பட்ட அதிகரிப் | 10 | |
| தாமத வரியில் ஏற்பட்ட குறைவு – சொத்து | 7 | |

| | |
|---|---|
| இருப்பு கொள்வனவு | 5,425 |
| பொருட்கள் சேவைகள் விற்பனைமூலம் பெற்ற வருமானம் | 16,540 |
| ஏனைய செலவுகள் - சேவைகள் | 210 |
| கூலி சம்பள செலவுகள் | 4,690 |
| வட்டி செலவுகள் | 95 |
| வருமான வரிச் செலவுகள் | 205 |

**மேலதிக தகவல்கள்**

(1) நீண்ட காலக் கடனாக பெற்றது ரூபா. 590,000.

(2) செலுத்திய நீண்டகாலக் கடன் ரூபா. 90,000.

(3) பெற்ற வட்டி ரூபா. 5,000.

(4) கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம், இயந்திரம், உபகரணங்களுக்கு செலுத்திய தொகை ரூபா. 265,000.

(5) உபகரண விற்பனைமூலம் பெற்றுக்கொண்ட தொகை ரூபா. 150,000.

(6) நிறுவனத்தின் உற்பத்தி செய்முறையினை மேற்க்கொள்வதற்க்காக கொள்வனவு செய்யப்பட்ட மென் பொருளுக்கு செலுத்திய தொகை ரூபா. 135,000.

(7) கொள்வனவு செய்யப்பட்ட ஆதன முதலீட்டுக்கு செலுத்தியது ரூபா. 345,000.

(8) இரண்டாவது ஆதன முதலீடு ரூபா. 345,000 விற்க்கு கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது. (9) நிதி குத்தகை தொகையை குறைப்பதற்க்காக ரூபா. 110,000 செலுத்தப்பட்டது.

2012 ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவற்றினதும் மீதி ரூபா. 130,000 வும் 2012 இறுதியில் இவற்றின் மீதி ரூபா. 5,940,000 மாக காணப்பட்டது.

**செயற்பாட்டு நடவடிக்கைகளை நேர்முறையை பயன்படுத்தி பிரசுரிக்கும் வகையில் 31 டிசம்பர் 2012 இல் முடிவுற்ற ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்குக.**

**(20 புள்ளிகள்)**